(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 113.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 நவம்பர் 28, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

826/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 2019 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் ஏற்பட்டுள்ள முழுமையான நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதில் தொழிற்பாட்டு நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தால் விமானங்களுக்காகச் செலுத்தப்படும் வருடாந்தக் குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படும் விமானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்த கடன் தவணைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படிக் கடன் தவணையில் உள்ள மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1062/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வாகனம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்களிலிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டிய வரித் தொகை என்ஜின் கொள்ளளவுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iii) வாகனங்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஈட்டிக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வரித் தொகை மற்றும் அவற்றிலிருந்து இதுவரை ஈட்டிக்கொள்ளப்பட்ட வரித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மீண்டும் வாகனம் இறக்குமதி செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை மற்றும் மோட்டார் சைக்கில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு முச்சக்கர வண்டிக்கும் அறவிடப்படுகின்ற வரித் தொகை எவ்வளவு;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு மோட்டார் சைக்கிலுக்கு அறவிடப்படுகின்ற வரித்தொகை என்ஜின் கொள்ளளவுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1278/2025

கௌரவ அஜித் கிஹான்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு காணியும் வழங்கப்பட்டுள்ள முதலீட்டுக் கருத்திட்டம், காணியின் அளவு மற்றும் அமைந்துள்ள பிரதேசச் செயலகம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை உரியவாறு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், குத்தகைத் தொகை செலுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவற்றில் குறை அபிவிருத்தியுடைய காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி காணிகள் உரியவாறு அபிவிருத்தி செய்யப்படாதவிடத்து அல்லது குத்தகை செலுத்துதல் தவிர்க்கப்பட்டுள்ள பட்சத்தில் அவை மீள சுவீகரிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்படி ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மொத்தக் காணியின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அக்காணிகள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1313/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எல்பிட்டிய கல்வி வலயத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற பாடசாலைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்ட வருடம் மற்றும் நிர்வாக சபை அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் அரச நிறுவனங்கள் யாவை;

(iv) மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சுக்கு அல்லது மாகாண கல்வி அமைச்சுக்கு மேற்படி பாடசாலைகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

(v) மேற்படி பாடசாலைகளினால் வழங்கப்படும் கல்வியின் தரம் மற்றும் இப்பாடசாலை மாணவர்களது உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1430/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிமடை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அலங்காலகால கிராம அலுவலர் பிரிவின், ஹரக்கமகந்த கிராமத்தில் சுமார் ஐந்து ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அரச காணி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் காணி கூட்டுத்தாபனத்திற்கு முறைப்படி கையுதிர்ப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கூட்டுத்தாபனத்தினால் மேற்படிக் காணி மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அது சட்டரீதியானதா என்பதையும்;

(v) அந்த மூன்றாம் தரப்பினர் யாவர் என்பதையும்;

(vi) சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பினரால் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரி நிலுவைத்தொகை செலுத்த வேண்டியிருக்கும்போது, மேற்படி காணியை ஒரு தனியார் வங்கியில் அடகு வைத்து கடன் தொகையொன்றைப் பெற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சட்டவிரோதமற்றதா என்பதையும்;

(iii) மேற்படி காணியை சாட்டுதல் செய்கையில் மற்றும் வரி நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் கடன் தொகையொன்றைப் பெற நடவடிக்கை எடுத்திருப்பதன் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் சட்டத்தை மீறியுள்ளதா என்பதையும்;

(iv) அந்தக் காணியை அரசாங்கத்திற்கு மீளக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2025 நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 9.30 மணி வரை இருக்குமாக. மு.ப. 9.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2025 நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2025 டிசம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை இருக்குமாக. நள்ளிரவு 12.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. நள்ளிரவு 12.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025 டிசம்பர் 01 ஆம் திகதி, திங்கட்கிழமை மு.ப. 9.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— பொதுத் தனிசு ஒருங்கிணைத்தல் குழுவின் விதப்புரை மீது 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவுகள் 6(ஆ), (இ) மற்றும் (ஒ), 16 மற்றும் 31 என்பவற்றுடனும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்துடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 2459/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அ2.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவம்பர் 27).

*3.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொது விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொது விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*5.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், — களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்டின் வருடாந்த அறிக்கை (2022/2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.03.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்டின் 2022/2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் 2024.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.06.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.06.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கை (2022),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.07.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கை (2023),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2025.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2023),— 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகச் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் VI ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவின் கீழ் 2025.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2023.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.07.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.08.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ், செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் 2025 ஒக்தோபர் 04 ஆம் திகதி விதிக்கப்பட்டதும், 2025.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 26 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 22 இன் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்பிறல் 01 ஆம் திகதிய 2430/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 15 ஆம் திகதிய 2458/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*19.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

20.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ2.

“ஒதுக்கீடு” எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.